## ஒதுக்கீட்டுத் தலைப்பு 256 - மாவட்ட செயலகம் கம்பஹா

## கம்பஹா மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களின் கணக்குகள் சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 01. மாவட்ட செயலகங்களின் பிரதான செயற்பணிகள்

* வறுமையை ஒழிப்பதற்கான வழிவகுத்தல்
* தேர்தல் தொடர்புறுத்தல் பணிகள்
* அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடலும் மேற்பார்வை செய்தலும்.
* அனர்த்த நிவாரணச் செயற்திட்டங்களையும் புனர்நிர்மாணச் செயற்திட்டங்களையும் நிர்வகித்தல்
* மாவட்டச் செயற்திட்ட நிர்வாகமும் வழிகாட்டலும்
* வருமானங்களைச் சேகரித்தல்.

### 2. மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | |
|---|---|---|---|
| அத்தனகல்ல | கம்பஹா | மஹர | வத்தளை |
| பியகம | ஜா-எல | மினுவாங்கொடை | |
| தொம்பே | கட்டானை | மீரிகம | |
| திவுலப்பிட்டிய | களனி | நீர்கொழும்பு | |

### 3. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**4.5 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் நிலைமைகள் இந்த அறிக்கையின் (அ) முதல் (உ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 4.6 முதல் 4.13 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) **கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

(i) மாவட்ட செயலகத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதியில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு | கணக்கின் பெயர் | கணக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 256 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 2011 மே 09 |

(ii) நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்பான அறிக்கைகளின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் ரூபா 96,447,286 தொகையான நிலையான சொத்துக்களின் சரியான தன்மையை மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்காமையினால் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

14 செலவின விடயங்களுக்காக மிகையான ஒதுக்கீடுகள் மேற்கொண்ட காரணத்தினால் ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 7% முதல் 51% வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் 2010 நவம்பர் 04 ஆந் திகதிய 6/2010 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் 2.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2011 சனவரி 05 ஆந் திகதி வரையில் கட்டுநிதி மீதிகள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 13 பிரதேச செயலகங்களினாலும் கட்டுநிதி மீதிகளைத் தீர்ப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக மாவட்ட செயலகத்தின் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 50,423,061 மீதியானது 2011 சனவரி தொடக்கம் மார்ச் இறுதி வரையான காலப்பகுதியில் 03 சந்தர்ப்பங்களில் தீர்க்கப்பட்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக்கள்**

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 782,608 தொகையானது உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| **(அ) நிதிப்பிரமாணம்** | | |
| (i) நி.பி 371 | 211,200 | செயல்நிமித்த உப கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்தவுடன் உடனடியாகவே தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 11 உபகட்டுநிதிகள் 2 தொடக்கம் 8 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. |
| (ii) நி.பி 1646 | 158,054 | வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் வத்தளை பிரதேச செயலாளர் காரியாலயத்தின் வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பாக திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது. |
| (ஆ) மாவட்டச் செயலாளரின் சுற்றுநிருபம் | | |
| (i) 2007 யூன் 29 ஆந் திகதிய 1/8/18 ஆம் | | I. சகல கிராம அலுவலர் காரியாலயங்களும் ஆகக் குறைந்தது வருடமொன்றிற்கு நான்கு தடவைகள் |

இலக்க சுற்றறிக்கை

பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் பிரதேச செயலகங்களின் கிராம அலுவலகர் பிரிவுகளின் பரீட்சிப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| **பிரதேச செயலகம்** | **மொத்த பிரிவுகளின் எண்ணிக்கை** | **பரிசோதனை செய்த தடவைகளின் எண்ணிக்கை** | **பரிசோதனை செய்த / பரிசோதனை செய்யாத பிரிவுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| மீரிகம | 149 | 1 | 28 |
| | | பரிசோதனை செய்யப்படாதவை | 121 |
| தொம்பே | 133 | 1 | 1 |
| | | பரிசோதனை செய்யப்படாதவை | 132 |
| கம்பஹா | 101 | 1 | 6 |
| | | 2 | 74 |
| | | 3 | 21 |
| கட்டானை | 79 | 1 | 26 |
| | | பரிசோதனை செய்யப்படாதவை | 53 |

II. சகல காலாண்டின் ஆரம்பத்திலும் பிரதேச செயலாளரின் தலைமையில் கிராம அலுவலர் காரியாலயங்களின்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பரிசோதனை தொடர்பான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் தொம்பே மற்றும் கட்டானை பிரதேச செயலகங்களில் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| | | | III. | கட்டானை பிரதேச செயலகத்தின் நிருவாக கிராம அலுவலரினால் பரிசோதனை செய்யப்பட்ட காரியாலய பரிசோதனை அறிக்கைகளில் 3 சந்தர்ப்பங்களில் கிராமசேவை அலுவலர்கள் கையொப்பம் இட்டிருக்கவில்லை. |
| (இ) | மாவட்டச் செயலாளரின் 2007 யூன் 10 ஆந் திகதிய 1/1/17 ஆம் இலக்க கடிதம் | 42,717 | I. | பிரயாணச் செலவு விண்ணப்பத்துடன் அலுவலர்களினால் செய்யப்பட்ட வேலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் செய்யப்பட்ட வேலை அறிக்கைகள் பெறப்படாமல் மாவட்டச் செயலகம் மற்றும் தொம்பே பிரதேச செயலகம் என்பவற்றில் 5 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 42,717 கூட்டுத் தொகையான பிரயாணச் செலவுகளும் இணைந்த படிகளும் செலுத்தப்பட்டிருந்தன. |
| | | 10,695 | II. | முன்நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செய்யப்பட்ட வேலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட திகதிகள் என்பன குறிப்பிடப்படாத கம்பஹா பிரதேச செயலகத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 10,695 தொகையான பிரயாணச் செலவுகளும் இணைந்த படிகளும் செலுத்தப்பட்டிருந்தன. |

## 4.8 கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமை

தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் மாவட்டச் செயலகம் கேள்வித் திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை.

## 4.9 நட்டங்களும் இழப்புக்களும்

வத்தளை பிரதேச செயலகப் பிரிவில் முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 15 லீற்றரையுடைய 10 நீர்த்தாங்கிகள் கொள்வனவு செய்யும் போது ஆகக் குறைந்த விலையான ரூபா 2,450 தொகை நிராகரிக்கப்பட்டு ரூபா 4,985 படி கொள்வனவு செய்யபட்ட காரணத்தினால் ரூபா 25,350 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 4.10 செயற்பாடு செயற்திறனின்மைகள்

2010 ஆம் ஆண்டின்போது வத்தளை பிரதேச செயலகத்தினால் 4 பன்முகப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 112,959 தொகையான 3 உடற்பயிற்சித் தொகுதிகள், 4 கைப்பந்துகள், 96 டெனிஸ் பந்துக்கள், 10 பிளாஸ்டிக் கதிரைகள் மற்றும் 9 பிளாஸ்டிக் நீர்த்தாங்கிகள் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.11 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன

(அ) மாவட்டச் செயலகத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகள் பொதுக் கணக்குக் குழுவினால் பரிசோதனை செய்யப்பட்டதன் பின்னர் உருவான விடயங்கள் தொடர்பாக பொதுக் கணக்குக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட சிபார்சுகளை அதிகாரிகள் அமுல்படுத்தும்போது மந்த நிலை காணப்பட்டது.

## 4.12 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் வெற்றிடங்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை வருமாறு.

| ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைககளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 61 | 57 | 04 | - |
| மூன்றாம் நிலை | 25 | 18 | 07 | - |
| இரண்டாம் நிலை | 1,653 | 1,476 | 177 | - |
| ஆரம்ப நிலை | 119 | 112 | 07 | - |
| ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| உப மொத்தம் | 1,858 | 1,664 | 195 | 01 |

## 4.13 உள்ளகக் கட்டுப்பாடு

### முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவினை அமுல்படுத்துதல்

நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழுள்ள முகாமைத்துவ, கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009 (1) ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆகக்குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவையாவது கூட்டமொன்று நடாத்தப்பட வேண்டியிருந்த போதும், 2010 ஆம் ஆண்டிற்காக ஒரு தடவை மாத்திரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடைபெற்றிருந்தது.